# சேராச் சேர்த்தி

ஸ்ரீ உ.வே. ஸ்ரீவில்லிபுத்தூர் வித்வான். கீ. கண்ணன்ஸ்வாமி, ஸ்ரீரங்கம்

ஸ்ரீமந்நாராயணனையே பரம்பொருளாகக் கொண்ட பரமவைதிக ஸித்தாந்தம்தான் விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தமாகும். வேதங்களிலும் உபநிடதங்களிலும் பகவான் "நிர்க்குணன்" (குணங்கள் ஏதுமில்லாதவன்) "நிராகாரன்" (உருவமேதுமில்லாதவன்) என்றும், "குணவான்" (பற்பல குணங்களை உடையவன்) "ரூபவான்" (அழகிய உருவத்தை உடையவன்) என்றும் பலபடியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீசங்கரரின் அத்வைத ஸித்தாந்தத்தில் பகவானுக்கு குணம் கிடையாது; ரூபம் கிடையாது என்று சொல்லிவிட்டார். எம்பெருமானார் தமது ஸித்தாந்தத்தில் பகவானுக்கு ரூபம் உண்டு; குணங்கள் உண்டு என்று அதே வேத வாக்யங்களைக் கொண்டு ஸ்தாபித்துள்ளார். நிர்க்குணன் என்றால் अखिलहेयप्रत्यनीकः என்று அருவருக்கத் தக்க குணங்கள் அற்றவன் என்றும், गुणवान् என்றால் समस्तकल्याणगुणविशिष्ट (அனைத்து நற்குணங்களும் பொருந்தியவர்) என்றும் கூறியுள்ளார். निराकारः என்றால் ஐம்பூதங்களாலான சரீரம் உடையவர் அல்லர் என்றும், रूपवान् என்றால் அப்ராக்ருதமான திவ்யமங்கள விக்ரஹத்தை உடையவர் என்றும் விளக்கியுள்ளார். இதனையே நம்மாழ்வாரும்,

உளனெனில் உளன் அவனுருவம் இவ்வுருவுகள்
உளனலனெனில் அவனருவம் இவ்வருவுகள்
உளனென இலனென இவை குணமுடைமையின்
உளனிரு தகைமையொ டொழிவிலன் பரந்தே. (1-1-9)

என்று அருளியுள்ளார். அந்த பகவானது குணங்களுக்குக் கணக்கே கிடையாது. बहवो नृप कल्याण गुणाः पुत्रस्य सन्तिते என்று அயோத்தி மக்கள் தசரதனிடம் கூறியதாக ஸ்ரீராமாயணம் கூறுகிறது. கணக்கற்ற குணங்களை உடைய எம்பெருமானிடம் சில குணங்கள் பெரிதும் போற்றப்படுகின்றன. ஸ்ரீவிஷ்ணு புராணத்தில் 'பகவான்' என்ற சொல்லுக்கு ஆறு குணங்களை உடையவன் என்று குறிப்பிடப்படுகிறது. षण्णां भग इतीरितः என்று. அதில் பலவகையான ஆறு குணங்கள் கூறப்படுகின்றன. அவற்றுள் முக்கியமாக ஸ்வாமித்வம், ஸௌலப்யம், ஸௌசீல்யம், வாத்ஸல்யம், ஜ்ஞானம், சக்தி என்ற ஆறு கூறப்படுகின்றன. பரத்வமும் ஸௌலப்யமும் நேர்மாறான குணங்களாகும். அதே போன்று ஸௌகுமார்யம், வீர்யம், நிக்ரஹம் அநுக்ரஹம் இவையெல்லாம் ஒன்றுக்கொன்று முரண்பட்டவையாகும். இத்தகைய நேர்மாறான குணங்கள் அனைத்தும் ஒருங்கே பொருந்தியிருப்பது எம்பெருமான் பக்கலிலேதான் என்பதனை இனிக் காண்போமாக.

பரத்வம் - ஸௌலப்யம் இவை இரண்டும் நேர்மாறான குணங்களாகும். அருமை - எளிமை என்பது பொருளாகும். எதிர்மறையான இவ்விரண்டும் ஒருங்கே பொருந்தியிருந்தால்தான் கார்யகரமாகும். இதனை நம்பூர்வர்கள், "केवलं परत्वं च केवलं सौलभ्यं च कनकाचल लोष्ट शकलचोरि व न समाश्रयणीयत्वाच कल्पते । परत्वे सति सौलभ्यं தான் பயனுடையதாகும் என்று அருமையான உலகியல் எடுத்துக்காட்டுக் கூறி விளக்குகின்றனர். வறியவன் ஒருவன், ஒரு மகானைக் கண்டு தனது வறுமையைப் போக்கியருளுமாறு வேண்டினான். அவரும் ஒரு காட்டினைக் குறிப்பிட்டு அங்கே தங்கமலை இருக்கிறது, அதிலுள்ள தங்கத்தைக் கொண்டு உன் வறுமையைப் போக்கிக் கொள்வாயாக என்றார். பெரியவர் சொன்ன இடத்திலே சென்று பார்த்த வறியவன், தங்க மலையைக் கண்டு பேரானந்தம் கொண்டான். அதனைப் பெயர்த்தெடுக்க முற்பட்ட காலத்து ஒரு குன்றிமணிதங்கம்கூட பெயர்த்தெடுக்க முடியவில்லை. தங்கக் கட்டிகளாக ஏதேனும் கிடைக்குமோ என்று பார்த்தான். அம்மலையைச் சுற்றி கூழாங்கல் ஓட்டாஞ்சில்லுகள் நிரம்பக் கிடந்தன. விலைபெறக்கூடிய தங்கமோ மலையாக துளியும் பெயர்த்தெடுக்க முடியாத நிலையிலுள்ளது. எளிதாக எடுத்துச் செல்லத்தக்க கூழாங்கற்கள் ஓட்டுச் சிதறல்கள் விலைபோகக் கூடியவையல்ல. ஆக இவ்விரண்டினாலும் ஒருவனுக்கு எந்தவிதமான பயனுமில்லை. அதே தங்கமலை சிறு சிறுகட்டிகளாக இருக்குமேயானால் அதுவே பயனுடையதாயிருக்கும். அதே போன்று வேண்டுவார்க்கு வேண்டுவன எல்லாம் தரக்கூடிய பரமாத்மாவோ எட்டாத பரமபதத்தில் கண்ணாலே காணமுடியாதவனாயுள்ளான். கண்ணாலே எளிதில் காணக்கூடிய மண்ணுலக மாந்தர்கள் ஏதும் தர இயலாது பயனற்றவர்களாக உள்ளனர். கண்ணாலே காணமுடியாத பரமாத்மா, எல்லார்க்கும் தெரியக்கூடிய வகையில் கண்ணுக்கெளியனாய் மனிதனாக வந்து பிறந்தானானால் அவரால்தான் அனைத்து கார்யங்களும் முடியும். சேராச் சேர்த்தியாக மனுஷ்யத்வே பரத்வம், பரத்வேஸதி ஸௌலப்யமாக அவதாரங்கள் எடுத்தால்தான் அதுவே நமக்குக் கார்யமாகும்.

அத்தகைய அவதாரங்களுள் தலைசிறந்தது ஸ்ரீ க்ருஷ்ணாவதாரமாகும். அவதரிக்கும்போதே பரதத்வ சின்னத்தோடு சதுர்புஜத்துடன் சங்கசக்ரகதாதாரியாய், ஸர்வாபரணபூஷிதராய் அவதரித்தார். அடுத்த நிமிஷமே தாய் தந்தையர் வேண்டுகோளுக்கிணங்க நாட்டுக் குழந்தையாக ஆக்கிக் கொண்டார். இதுவே 'பரத்வேஸதி ஸௌலப்யம்' என்பதற்கு எடுத்துக்காட்டாகும். மேலும்,

"ईश्वरः सर्वभूतानां हृद्देशे अर्जुन तिष्ठति ।
भ्रामयन् सर्वभूतानि यन्त्रारूढानि मायया ॥

என்று உலகையெல்லாம் ஆட்டிவைக்கக் கூடிய பரமாத்மா, ஓரிடைச்சி தயிர்கடைய அவள் கொடுக்கும் வெண்ணெய்க்காக அவள் ஆட்டுவிக்கத் தான் நர்த்தனம் ஆடினானே, இதுவல்லவோ அரியவன் எளியவனான தன்மை. இதனை வேதாந்த தேசிகர் அழகுறச் சித்தரிக்கிறார்.

आनिर्भवत्वनिभुताभरणं पुरस्तात् आकुञ्चितैक चरणं निभृतान्यपादम् ।
दध्नानिमन्यमुरषरेण निबद्धतालं नाथस्यनद्भवने नवनीतनाटयम् ।।

ப்ரளயகாலத்தில் அண்டசராசரங்கள் அனைத்தையும் தன் வயிற்றில் அடக்கிக் கொண்டு ஆலந்தளிரிலே பள்ளிகொண்டிருக்கும் பரமன், सदैकरूपरूपाय என்றும் अविकाराय शुद्धाय नित्यायपरमात्मने என்றும் போற்றப்படுமவன், வெண்ணெய் களவு செய்த காலத்து யசோதை அவனைக் கட்டுவதற்குப் பற்பல கயிறுகளை முடிச்சுப் போட்ட காலத்து எட்டம் காணாது இரண்டங்குலம் குறைந்ததே.

तद्दामबध्यमानस्य स्वार्भकस्य कृतागसः ।
द्व्यङ्गुलोनमभूत् तेन सन्दधेऽन्यच्च गोपिकाः ।।

கயிறுகளெல்லாவற்றையும் முடிபோட்ட காலத்தும் கட்ட முடியாத நிலையில் தனது பரத்வத்தைக் காட்டிய கண்ணன், विस्रस्तकबरस्रजा என்று கூந்தலெல்லாம் அவிழ்ந்து புரள, வேர்க்க விறுவிறுக்க, மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க, ''கண்ணா! கட்டுப்படமாட்டாயா'' என ஏங்கிய காலத்துத் தன் வயிற்றை நெகிழ்த்திக் காட்டிக் கட்டுண்ணப் பண்ணிக் கொண்டானே இதுவல்லவோ எளிமை. இதனை எண்ணியே ஸர்வஜ்ஞரான நம்மாழ்வாரும் 'உரலினோடு இணைந்திருந்தேங்கிய எளிவு எத்திறம்' என்று ஆறுமாதம் மோகித்துக் கிடந்தார்.

'பாரிடந்து, பாரை உண்டு, பாருமிழ்ந்து, பாரளந்து, பாரையாண்ட பேராளன்' என்று திருமங்கை மன்னனால் போற்றப்படுமவரும், இவ்வுலகைப் பருத்தி பட்ட பன்னிரண்டும் பருத்துமவருமாகிய பரந்தாமன், பஞ்சவர்க்காகப் பாண்டவதூதனாய்ச் சென்று சுயோதனன் பக்கல் யாசகம் கேட்டானே இதனினும் எளிமை உண்டோ?உ

'ஐந்து ஊர்வழங்குக என உற்றிரந்தனன்
இவ்வுலகெலாம் உதவும் உந்தியான்'

எனவில்லிபுத்தூரார் விளம்பியுள்ளார். திரௌபதி பண்ணிய சரணாகதிக்காக பதினெட்டு அநுக்ரஹம் பண்ணிய சரணாகத பக்ஷபாதியின் ஸௌலப்யம் வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாததாகும்.

அடுத்தபடியாக வன்மை மென்மை இரண்டும் எதிர்மறையான குணங்களாகும். இவையிரண்டும் சேர்த்திருக்கும் தன்மையை இனிக் காண்போம். ஸ்ரீராமாயணத்தில் இளைய பெருமாள் சுடுசினத்துச் சூர்ப்பனகையின் காதையும், மூக்கையும் அறுத்துவிட்டார். ஜனஸ்தானம் சென்று ஓலமிட்ட அவளைக்கரன் 'உன் காதையும் மூக்கையும் அறுத்து இந்நிலைக்கு ஆளாக்கியது யார்?' என்று கோபத்துடன் வினவினான். காதையும், மூக்கையும் அறுத்த தயரதன் மைந்தர்களை வையவேண்டிய திருக்க வாயாரத் துதிக்கிறாள்.

तरुणौ रूपसंपन्नौ सुकुमारौ महाबलौ ।
पुण्डरीक विशालाक्षौ चीरकृष्णाजिनांबरौ ।। என்று.

இவ்விடத்தில் பெரியவாச்சான்பிள்ளை, 'இவளுக்கு வைரூப்யம் பிறந்தது இத்தனை போக்கி வைராக்யம் பிறக்கவில்லை' என்று அருளியுள்ளார். இதில் நேர்மாறான சொற்கள் ஸௌகுமார்ய வீர்ய என்பனவாகும். மென்மை, வன்மை என்னும் பொருள் உடையனவாகும். ஸௌகுமார்யம் என்பதற்கு விளக்கம் கூறப்புகுந்த நம்பூர்வாசார்யர்கள், ''பருக்கைப் பற்றியே விருபூ விழுந்தாலும் கன்றும் படியன்றோ திருமேனியினுடைய ஸௌகுமார்யம் இருக்கும்படி'' எனக்கூறியுள்ளனர். பஞ்சவடியில் சீதாராமர் வசிக்கும் காலத்து கோதாவரி நதி ஸ்நானத்துக்குச் செல்லும் காலத்து, பெருமாளின் நடையழகைக் கண்டு கொண்டே பின்சென்ற பிராட்டி, ராமன் முதுகிலே புண்ணைப் பார்த்துப் பதறிப் போய்விட்டாள். வேட்டைக்குச் செல்லும் வீரராகிய அவருக்கு மார்பிலே புண்பட வாய்ப்புண்டேயொழிய முதுகில் எவ்வாறு புண் வந்தது என்று பகல்பூராவும் கவலையுற்றாள். இரவு சயனித்துக் கொள்ள முற்பட்டபோது படுக்கையை உதறினாள். அதிலே காய்ந்த பூவின் இதழ் இருந்தது. அந்தோ! நாம் தலையில் வைத்துக் கொண்டிருந்த பூவின் இதழ் அல்லவோ பெருமாள் திருமேனியில் உறுத்திப் புண்ணாக்கியிருக்கிறது என எண்ணி மருந்திட்டு ஆற்றினாள். பூப்பட்டால் கொப்பளிக்கும் பொன்னுத்திருமேனி ஸ்ரீராமனுடையது என உணர்ந்தாள். சூர்ப்பணகை, ''ஸுகுமாரௌ'' என்று சொன்னபோது கரன் நினைத்தானாம். துர்பலர் ராமலக்ஷ்மணர்கள்; அவர்களை சுலபமாகக் கொன்றுவிடலாம் என்று எண்ணினானாம். அடுத்து 'மஹாபலௌ என்கிறாள்.'' வல்லாளன் தோளும் வாளரக்கன் முடியும் தங்கை பொல்லாத மூக்கும் போக்குவித்தான்'' என்கிறபடி நான் மூக்கறுப்புண்டாப்போலே நீங்களும் முடியறுப்புண்டு முடிந்து போமித்தனை போக்கி உங்களால் அவர்களை வெல்லவொண்ணாதுகாணும்'' என்று தனி ச்லோகத்தில் பெரியவாச்சான்பிள்ளை அருளிச் செய்துள்ளார். இக்கருத்தை எண்ணியே ''महाबलौ '' என்றாள். இவ்வாறு ''ஸுகுமாரௌ மஹாபலௌ'' என்று வன்மையும் மென்மையும் இணைந்து பேசப்பட்டுள்ளன. திருப்பாவையில் 4-வது பாசுரத்தில் ஸ்ரீ ஆண்டாள் ''பாழி அம்தோள்'' என்று அருளியுள்ளாள். பாழித்தோள் - உலகப்பரப்படங்கலும் ரக்ஷிக்கக்கூடிய வலிமைமிக்க தோள். அம்தோள் - காணக் கண்கோடி வேண்டும் என்னும்படியான அழகிய மெல்லிய தோள் - என்று வன்மையும், மென்மையும் பெருமாளது தோளில் மிளிர்கின்றன என்று பொருத்தியிருப்பதைக் காணலாம்.

சென்னையில் 1964-ல் கீர்த்திமூர்த்தியான காரப்பங்காட்டு ஸ்வாமியின் பகவத் கீதாபாஷ்யம் காலக்ஷேபம் கேட்கும் பாக்யம் பெற்றேன். அன்று सौकुमार्य, वीर्य என்ற இரண்டு சொற்களின் விளக்கம் அனுக்ரஹிக்கலாயிற்று. அப்போது ஸ்வாமி ஸாதித்ததாவது - ''மிருகக்காட்சி சாலைக்குச் சென்றீர்களானால் அங்கே சிங்கத்தை கூண்டில் அடைத்து வைத்திருப்பார்கள். நாம் கூண்டிற்கு வெளியேயிருந்து அதன் பின்புறத்தில் உடலைத் தொட்டுபார்த்தோமானால் வெல்வெட் மாதிரி மென்மையாக இருக்கும். ஆனால் அது சீறியெழுந்தால் எவ்வளவ வன்மையாக இருக்கும். ஆக நாட்டிலே நாம் காணும் சிங்கத்தினிடத்திலேயே வன்மையும், மென்மையும் ஒருங்கே சேர்ந்திருக்குமானால் எம்பெருமானிடத்தில் ஏன் பொருந்தியிருக்காது'' என்று அருளினார்.

அடுத்தது निग्रह மும் अनुग्रह மும் நேர்மாறான குணங்கள். அழித்தல், வாழ்வித்தல், நேர்எதிர்மாறான இவ்விரண்டு தொழிலும், எம்பெருமானிடத்தில் ஒருங்கே வெவ்வேறு காலத்தில் நிகழும் செயல்களாயிற்றே. ஒரே காலத்தில் எவ்வாறு நிகழும் என்று. அதற்கு பட்டர் அருளிய விடையாவது - 'இரணியன் பக்கம் சீற்றம் செல்லா நிற்கப் ப்ரஹ்லாதாழ்வானுக்கு அருள் பாலிக்கவில்லையோ' என்றார். ஹிரண்யகசிபுவினிடத்து நிக்ரஹமும் ப்ரஹ்லாதனுக்கு அநுக்ரஹமும் சம காலத்தில் நிகழ்ந்தனவே என்று விடையளித்தபோதிலும் நஞ்சீயர் மன அமைதி பெறாததால் மேலும் கூறுகிறார். 'சிங்கம் யானை மேலே சீறிப்பாய்ந்து கொண்டிருக்கும்போதே தன் குட்டிக்குப் பால் கொடுத்துக் கொண்டிருக்கும்; நாட்டிலே நாம் காணும் சிங்கத்தினிடத்திலேயே ஒரே சமயத்தில் யானையினிடத்தில் நிக்ரஹமும், குட்டியினிடத்தில் அநுக்ரஹமும் நிகழ்கிறதே. எம்பெருமானிடத்தில் ஏன் இருக்கலாகாது' என்று விடையிறுத்தார். இக்கருத்தையே வேதாந்த தேசிகர், தமது காமாஸிகாஷ்டகத்தில் அழகுற அருளிச் செய்துள்ளார்.

सटापटल भीषणे सरभसाट्टहासोद्भटे
स्फुरत्क्रुधि परिस्फुट भ्रुकुटिकेऽपि वक्त्रेकृते
कृपाकपय के सहिन् दनुजडिम्भ दत्तस्तना
सरोजसदृशा दृशाव्यतिविषज्यते व्यज्यते ।।

எம்பெருமானிடத்தில் சேராச் சேர்த்தியாகப் பல குணங்களும் பொருந்தியுள்ளமையைப் பார்த்தோம். இன்றைய உலகில் நம் கண் காண இக்குணங்களெல்லாம் பொருந்தி வாழ்ந்தவராகிய மஹான்தான் கீர்த்தி மூர்த்தியான நம் காரப்பங்காடு ஸ்வாமி. नर:पतित कायोऽपि यश: कायेन जीवति என்று அவரது பூத உடல் மறைந்தாலும், அவர் புகழுடம்பினராய் இன்றும் எளியேன் போல்வாருக்கெல்லாம் मार्गदर्शी ஆகவே திகழந்து வருகிறார். ''தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்'' ''காட்சிக்கெளியன் கடுஞ்சொலனல்லன்'' என்ற வள்ளுவர் வாக்கிற்கு இலக்கியமாகத் திகழ்ந்தவர். திருப்பாவையின் துவக்கத்தில் ''கதிர்மதியம் போல் முகத்தான்'' என்றருளிய ஆண்டாள் பின்னர், திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற்போல் அங்கணிரண்டும் கொண்டு எங்கள் மேல் நோக்குதி யேல் என்று அருளியுள்ளாள். எம்பெருமானது கண்கள் இரண்டும் சூர்யனைப்போலே பகைவரைச் சுட்டெரிப்பதாயும், சந்திரனைப் போலே குளிர்ந்து அடியார்க்கு அருள் பாலிப்பதாகவும் உள்ளது. ஸ்ரீ பாகவதத்தில் கண்ணன் பரத்வ சின்னத்தோட அவதரித்தபோது சுகர் வருணிக்கிறார்.

तुहिन भानु दिवाकरलोचनं निगमनिश्वसितस्वसुतस्यतत्
अनुबभूव मुहुर्मुहुरादरात् अनघमाननमानकदुन्दुभि: ।।

என்று சந்திரசூர்யர்கள் கண்ணாகவும் यस्यनिश्वसितं वेदा: என்று வேதம் மூச்சுக் காற்றாகவும் விளங்கியது. கண்ணன் பாண்டவதூதனாக துரியோதனன் சபைக்குச் சென்று தனக்குரிய ஆசனத்தில் அமர்ந்தபோது உள்ள அழகை வருணிக்கிறார் வியாசர்.

व्यभ्राजत सभामध्ये हेम्नीवोपहितो मणि: ।
तत्रगोविन्दमासीन प्रसन्नादित्य वर्चसं ।
उपासांचक्रिरे सर्वे कुरवो राजभि: सह ॥

என்று தங்கத்தகட்டில் அழுத்தின நீலமாணிக்கம் போலே ஸபையில் ஆசனத்தில் வீற்றிருந்த கண்ணன் துர்யோதனாதி துஷ்டசதுஷ்டர் பக்கலில் சுட்டெரிக்கும் சூர்யனைப் போன்று பார்த்தார். பீஷ்மத்ரோணாதிகள் பக்கல் சந்திரனைப் போலே குளிர கடாக்ஷித்தார். இதனைப் பெரியாழ்வாரும்,

கழல் மன்னர் சூழக் கதிர்போல் விளங்கி
எழலுற்று மீண்டே இருந்துன்னை நோக்கும்
சுழலைப் பெரிதுடைத்துச் சோதனனை
அழல விழித்தானே அச்சோ அச்சோ
ஆழியங்கையனே அச்சோ அச்சோ.

என்று வருணித்துள்ளார். துர்யோதனாதிகள் பக்கல் அழிக்கும் பார்வை. பீஷ்மத்ரோணாதிகள் பக்கல் வாழ்விக்கும் பார்வை. இவ்விடத்து பராசரபட்டரிடம் நஞ்சீயர்வினவுகிறார். நிக்ரஹமும் அநுக்ரஹமும் நம் ஸ்வாமி குழந்தையைப் போன்று எளியவராய் அறிவிலியாகிய அடியோங்கள் கேட்கும் ஐயங்களுக்கெல்லாம் எளிய முறையில் தினவடங்க விடையளிப்பார். புறச்சமயிகளைப் பற்றிப் பேசும்போது சூர்யனாக விளங்குவார். ஸ்வமத ஸ்தாபனத்தின்போது சந்திரனாக ஒளி வீசுவார். இது தேசிக ஸம்ப்ரதாயம்; இது லோக தேசிக ஸம்ப்ரதாயம் என்று எவர் மனமும் புண்படாத வகையில் ஆணித்தரமாக அர்த்த விசேஷங்களை விளக்கிக் கூறுவார். न मुखे नेत्रयोर्वापिललाटे चभ्रुवोस्तथा - अन्येष्वपिचगात्रेषु दोषा: संविदिता: क्वचित् என்ற திருவடியைப் போன்று பரம சாந்தஸ்வரூபியாய் பூ அலர்ந்தாப்போலே மிதபாஷியாகவும் ஸ்மிதபாஷியாகவும் விளங்கினார். வேதாந்த தேசிகனின் வைராக்யத்தைப் பற்றி ஒரு பாடலுண்டு.

குண்டலத்தினாலென்ன கடுக்கனென்ன - கொண்ட
　　விரலாழி யென்ன சாலுவென்ன
கொண்டற்றித்திரிவதனாலா வதென்ன
　　குவலயத்தில் விபுதர்களே சொல்லக் கேண்மோ.
விண்தலத்தினோர் பரவும் வேதாந்த தேசிகன்தான் தேவியார்க்கு
　　மண்டலத்தில் மின்னுமின்னுப்பூச்சியாம் பொன்
வராகந்தான் இவர்க்கு மனவிராகம் தானே.

வேதாந்தாசார்யரைப் போன்றும் கூரத்தாழ்வானைப் போன்றும் பரமவைராக்யசாலியாய் தாமும் தம் துணைவியாருமாய் துளியும் பொருளில் ஆசையற்றவர்களாய், முக்குறும்பறுத்தவர் என்று கூரத்தாழ்வானுக்குப் பின் நம் ஸ்வாமிக்கே பொருந்தும்.

அடியேன் 1964 ஜனவரியில் கலவல கண்ணன் செட்டிசாரிடியில் (சென்னை) ஸ்வாமியின் திருப்பாவை சாற்றுமறையில் அந்வயிக்கும் பேறு பெற்றேன். அன்பர் ஒருவர் அழகியதொரு ரோஜாப்பூ மாலை கொணர்ந்திருந்தார். அடியார்களது வேண்டுகோளுக்கிணங்க அதனை சார்த்திக்கொள்ள சம்மதித்தார். ஸ்ரீரங்கம் நம்பெருமாளுக்குப் பூச்சாத்து (கோடை) உத்ஸவத்தின்போது மெல்லியதொரு வஸ்த்ரத்தைத் திருமேனி முழுதும் போர்த்தி அதன் மேல்தான் பூ சாத்துவார்கள். அது போன்று ஸ்வாமியின் திருமேனியில் மெல்லிய வெண்பட்டைப் போர்த்தி அதன்மேல் ரோஜாப்பூமாலையை அணிவித்தார்கள். हेम्नीवोपहितोमणि: என்று தங்கத்தின் சிவப்புக்கற்களைப் பதித்தாற்போன்று ஜாஜ்வல்யமாக ஒளிவீசத் திகழ்ந்தார். சிறிது நாழிகையாவது இம்மாலையோடு ஸேவை சாதிக்க வேண்டுமென்றபோது ஸ்வாமி சாதித்ததாவது - எனக்கு இந்த ஒரு மாலையே தாங்கமுடியாமல் கனக்கிறதே. எம்பெருமான், எத்தனை பெரிய திண்டுமாலை, எத்தனை திருவாபரணங்கள் சாத்திக் கொண்டு ஸேவை சாதிக்கிறானே; இதிலிருந்தே அவன் ஸர்வசக்தன் என்று புலப்படுகிறதன்றோ; என்று அர்ச்சாவதாரத்திலுள்ள வைபவங்களை எல்லாம் பரிவுடன் ஆச்சரியமாக உபந்யஸித்தாயிற்று. ஸ்ரீவில்லிபுத்தூருக்கு ஒரு முறை எழுந்தருளி ஸ்ரீராமாயண உபந்யாசம் அநுக்ரஹித்தபோது ஸமர்ப்பித்த ஸம்பாவனையை இது அதிகமென்று ஸ்ரீஆண்டாளுக்குத் திரும்ப ஸமர்ப்பித்தாரே பொருளில் பற்றற்ற தன்மை அம்மகானைத் தவிர வேறு எவருக்கு வரும்? வருகிறார், வருகிறார், வந்துகொண்டே இருக்கிறார் என்று சொல்லவொண்ணாதபடி உபந்யாசங்களுக்குக் குறித்த காலத்தில் கணப்போதும் தப்பாமல் எழுந்தருளுவது, எடுத்துக் கொண்ட விஷயத்தைப் பாதை விலகாது கேட்பவர்கள் உள்ளம் குளிர அருளுவதோடன்றி பயனற்ற சொல் ஏதுமின்றி பகவதநுபவமாகவே குறிப்பிட்ட காலத்துக்குள் முடிக்கும் தன்மை நினைதொறும் நெஞ்சுருகச் செய்வதாகும். பிற்காலத்து உபந்யாஸகர்கள் கடைப்பிடிக்க வேண்டிய முறையில் मार्गदर्शी ஆகவும், आदर्शपुरुष ராகவும் விளங்கிய மகானை எப்போதும் நெஞ்சில் நிறுத்தி அவர் வழி நடந்து, நாமும் செங்கண் திருமுகத்துச் செல்வத்திருமாலால் எங்கும் திருவருள் பெற்று இன்புற்று வாழ்வோமாக.

।। नित्यश्री: नित्यमङ्गलम् ।।